இணைப்பு III.

(..259-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 262-க்கான விடையைக் காண்க.)

1982 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் தூத்துக்குடி அருகில், தைவான் நாட்டு மீன் பிடிப் படகுகள் மீன் பிடித்ததாக எந்தத் தகவலும் இல்லை. ஆனால், 1982 ஆம் ஆண்டு சூலைத் திங்களில் தூத்துக்குடி அருகில் தைவான் நாட்டு மீன் பிடிக் கப்பல்களின் ஊடுருவல் நடைபெற்றுள்ளது. தூத்துக்குடி, திருச்செந்தூர் கடற் பகுதிகளில், தைவான் நாட்டு மீன் பிடிக் கப்பல்கள், ஊடுருவல் செய்ததுடன் மீனவர்களின் பெருமளவு வலைகளைச் சேதப்படுத்தின என்ற தகவல்களை தூத்துக்குடி (மண்டலம்) மீன்துறை துணை இயக்குநர் 7—7—1982 ஆம் நாளிட்ட தந்தியின் மூலம் தெரிவித்தார். தந்தி கிடைக்கப் பெற்றவுடன் சென்னை பொது (ராணுவத்துறை) ஆணையர் மற்றும் செயலாளர், சென்னை கிழக்கு மண்டல கடற்கரை காப்பாளர், மண்டபம் கடற்படை காப்பாளர் ஆகியோருக்கு மேற்சொன்ன தைவான் நாட்டு மீன் பிடிக் கப்பல்களின் ஊடுருவல் பற்றிய தகவல்கள் தெரிவிக்கப் பட்டு அந்த மீன் பிடிக் கப்பல்களை பிடிக்க உடனடி ஏற்பாடு செய்யும்படிக் கேட்டுக் கொள்ளப்பட்டது. இதன் தொடர்பாக, மீண்டும் தூத்துக்குடி வடக்கு மீனவர்கள் சங்கத் தலைவர் திரு. சம்சு முகமது 10—7—1982 இல் அனுப்பிய தந்தியில் அயல் நாட்டு மீன்பிடிக் கப்பல்கள் தூத்துக்குடி கடற்பகுதி அருகில் மீன் பிடித்துக் கொண்டிருப்பதாகவும் இதனால், மீனவர்களின் வலைகள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவித்தார். திரு. சம்சு முகமது கொடுத்த தந்தியின் அடிப்படையிலும் உடனடியாக நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டு, சென்னை கிழக்கு மண்டல கடற்கரைக் காப்பாளர், கொச்சின் மண்டபம் கடற்கரை காப் பாளர், ஆகியவர்களுக்கு, இதுபற்றிய தகவல்கள் மீண்டும் தெரிவிக்கப்பட்டு, தூத்துக்குடி கடற் பகுதி அருகில் மீன் பிடிப்பதாக கூறப்பட்ட அயல்நாட்டுக் கப்பல்களை பிடிக்க உடனடி ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது.

2. சென்னை கிழக்கு மண்டல கடற்கரை காப்பாளரும் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு சந்தேகிக்கப்பட்ட பகுதி களில் அயல்நாட்டுக் கப்பல்களைத் தேடும் பணியை மேற்கொண் டார். எனினும் சந்தேகிக்கப்பட்ட கப்பல்கள் தென்படவில்லை என தெரிவித்துள்ளார். மேலும், மண்டபத்தில் உள்ள சுங்க இலாகாவை சார்ந்த ரோந்து விசைப் படகு தூத்துக்குடி கடற் பகுதிகளில் முகாமிட்டு ரோந்து சுற்றியதின் பயனாக தைவான் நாட்டு மீன் பிடிக் கப்பல்களின் நடமாட்டம் இல்லை எனவும் தற்போது மீனவர்கள் பயமின்றி தொழில் செய்கிறார்கள் எனவும் தெரிவித்து, மீனவர்களின் நலனைக் கருதி, மீன்துறை இயக்குநரால் மேற்கொள்ளப்பட்ட விரைவு நடவடிக்கைக்கும் மீனவர்களைப் பாதுகாத்ததற்கும் மீனவர்களின் சார்பில் உரிய நன்றியை, முத்து மற்றும் சங்கு குளிப்போரின் சங்கத்தின் தலைவர் திரு. சம்சு முகமது தெரிவித்துள்ளார்.